# பொள்ளாச்சி நகராட்சி

## 28.11.2018 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்ட தீர்மானம்

**1264)** அரசாணை எண்:73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MAIV) துறை நாள்:13.07.2018 மற்றும் அரசாணை எண்:76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.27.07.2018 ஆகியவற்றின்படி 01.04.2018 தேதி முதல் அனைத்து மாநகராட்சிகள், அனைத்து நகராட்சிகள் மற்றும் அனைத்து பேரூராட்சிகளிலும் உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும், குடியிருப்பு அல்லாத பிற கட்டிடங்களும் 100% மிகாமலும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்:73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்:13.07.2018 மற்றும் அரசாணை எண்:76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.27.07.2018 ஆகிவற்றின்படியும் பொள்ளாச்சி நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டும் வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சி திட்டப்பணிகளின் நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு நகர் மன்ற தீர்மானம் எண்.1152 நாள்.08.09.2018–ன்படி கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தினசரி நாளிதழ்கள், நகராட்சி இணையதளம், மற்றும் நகராட்சி அறிவிப்பு பலகை ஆகியவற்றில் பொது மக்களின் பார்வைக்கு விளம்பரம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| "A" மண்டலம் | ரூ. 4.20 |
| "B" மண்டலம் | ரூ.3.45 |
| "C" மண்டலம் | ரூ.2.70 |

மேலும், அரசாணை எண்:73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MAIV) துறை நாள்:13.07.2018 மற்றும் அரசாணை எண்:76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.27.07.2018 ஆகியவற்றின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படியும் தெருக்களின் மண்டலங்களான சீராய்வு செய்திடும் பொருட்டு பொள்ளாச்சி நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்:1153 நாள்.24.09.2018–ன்படி கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு இந்நகராட்சி பகுதியிலுள்ள தொருக்களை மண்டல மாற்றம் செய்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தினசரி நாளிதழகள், நகராட்சி இணையதளம், மற்றும் அறிவிப்பு பலகை ஆகியவற்றில் பொதுமக்களின் பார்வைக்கு விளம்பரம் செய்யப்பட்டது.

| பொள்ளாச்சி நகராட்சி<br>தெருக்கள் மண்டலம் சீராய்வு செய்தல் விபரம் | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | ஏற்கனவே உள்ள மண்டலம் | தற்போது மாற்றம் செய்யப்படும் மண்டலம் |
| 1 | 3 | பாலக்காடு ரோடு–I | B | A |
| 2 | 4 | வெங்கடேசா காலனி–I | C | B |
| 3 | 4 | வெங்கடேசா காலனி–II | C | B |
| 4 | 4 | ராமசாமி வீதி | C | B |
| 5 | 4 | கணிதமேதை ராமானுஜர் வீதி | C | B |
| 6 | 4 | ரிசர்வாயர் வீதி | C | B |
| 7 | 4 | சி.டி.சி ரோடு | C | B |
| 8 | 5 | பாரதி வீதி | C | B |
| 9 | 6 | காமராஜர் ரோடு | C | A |
| 10 | 6 | வெங்கட்ராமனன் வீதி | C | B |
| 11 | 6 | பாரதி வீதி | C | B |
| 12 | 6 | சுப்பம்மாள் வீதி | C | B |
| 13 | 8 | பி. காலனி பி.பிளாக் | C | B |
| 14 | 10 | பல்லடம் ரோடு விரிவு | C | B |
| 15 | 13 | நியூ ஸ்கீம் ரோடு | C | A |
| 16 | 15 | டாக்டர் அன்சாரி வீதி | C | B |
| 17 | 15 | எஸ்.ஆர்.எம்.எஸ்.மில் வீதி | C | B |
| 18 | 15 | பாலகோபாலபுரம் வீதி | C | B |
| 19 | 15 | நாச்சிமுத்து கவுண்டர் வீதி | C | B |
| 20 | 15 | பாலகோபாலபுரம் வீதி | C | B |
| 21 | 15 | மாரப்பன் சந்து | C | B |
| 22 | 15 | எஸ்.ஆர்.எம்.எஸ்.மில் வீதி | C | B |
| 23 | 15 | டாக்டர்.அன்சாரி வீதி | C | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | 16 | கோட்டூர் ரோடு | B | A |
| 25 | 16 | இமான்கான் வீதி | B | A |
| 26 | 16 | பாலகோபாலபுரம் வீதி | C | B |
| 27 | 16 | எஸ்.எஸ்.கோவில் வீதி | C | B |
| 28 | 16 | காரைக்கால் அம்மையார் வீதி | C | B |
| 29 | 16 | மகாத்மா காந்தி மண்டபம் வீதி | C | B |
| 30 | 17 | லட்சுமிநாதபுரம் வீதி | C | B |
| 31 | 17 | சல்டானா ரோடு | C | B |
| 32 | 17 | கிருஷ்ணசாமி வீதி | C | B |
| 33 | 17 | பெருமாள் வீதி | C | B |
| 34 | 17 | ராஜாமில் ரோடு | C | B |
| 35 | 18 | ஜுபிலி கிணறு வீதி | C | B |
| 36 | 18 | ஆரோக்கியநாதர் வீதி | C | B |
| 37 | 19 | மார்கெட் ரோடு | C | B |
| 38 | 19 | எஸ்.எஸ். கோவில் வீதி | C | B |
| 39 | 21 | ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வீதி | C | B |
| 40 | 25 | ரயில்வேஸ்டேசன் வீதி | C | B |
| 41 | 25 | கூட்ஷெட் ரோடு | C | B |
| 42 | 28 | சத்திரம் வீதி | C | B |
| 43 | 28 | கடை வீதி | C | B |
| 44 | 28 | வெங்கட்ரமணன் வீதி | C | B |
| 45 | 28 | கோட்டூர் ரோடு | B | A |
| 46 | 28 | சத்திரம் வீதி | C | B |
| 47 | 28 | பார்க் ரோடு | C | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 48 | 28 | வெங்கட்ரமணன் வீதி | C | B |
| 49 | 28 | மகாத்மா காந்தி மண்டபம் வீதி | C | B |
| 50 | **32** | ஊத்துகாடு ரோடு | C | B |

மேலும், மேற்கண்ட நகர்மன்ற தீர்மானங்கள் பொது மக்களின் பார்வைக்கு விளம்பரம் செய்யப்பட்டதின்படி, வணிகர்கள் சங்கம், நுகர்வோர் பாதுகாப்பு மன்றம், வல்லமை மக்கள் சங்கம், திரவிட முன்னேற்ற கழகம், கோவை ரோடு வணிகர்கள், பாலகேபாலபுரம் வீதி குடியிருப்பவர்கள், அன்சாரி வீதி குடியிருப்பவர்கள், நியூஸ்கீம் ரோடு வியாபாரிகள், ராமகிருஷ்ணபுரம் வீதி குடியிருப்பவர்கள் மற்றும் பொது மக்கள் மூலமாக மேற்கண்ட சொத்துவரி சீராய்வு மற்றும் தெருக்கள் சீராய்வு செய்திட ஆட்சேபனைகள் தெரிவித்துள்ளனர்.

மேற்கண்ட ஆட்சேபனைகள் குறித்து கடந்த 22–10–2018–ம் தேதி நகராட்சி அலுவலகத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ஆட்சேபனையாளர்கள் மற்றும் ஏனைய பொதுமக்கள் கலந்துகொண்டனர், இதில் சொத்துவரி சீராய்வு செய்திடவும், தெருக்களை மறுசீராய்வு செய்திடவும் முற்றிலும் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டது. ஏனெனில் 1998ஆம் ஆண்டு உயர்த்தப்பட்ட சொத்துவரி சீராய்வானது, தமிழகத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்க்கு பொள்ளாச்சி நகராட்சியில் அதிகப்படியான சொத்துவரி உயர்த்தப்பட்டுள்ளது. எனவே 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் சொத்துவரி சீராய்வினை கைவிட வேண்டும் என பொதுமக்கள் மற்றும் ஆட்சேபனையாளர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி மேற்கண்ட ஆட்சேபனைகள் குறித்து கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இதில் நகராட்சியில் பிரதான வருவாயான சொத்துவரியினை சீராய்வு மேற்கொள்ளப்படும் பட்சத்தில் மட்டுமே எதிர் வரும் காலங்களில் ஏற்படும் நிதி தேவைகளுக்கு உதாரணமாக ஊதியம், பாதாள சாக்கடைத்திட்டம், பல்வேறு வங்கிகளில் பெறப்பட்டுள்ள கடன்கள், ஏனைய திட்டங்களுக்கு செலவிடப்படும் தொகைகள் ஆகியவற்றிக்கு சொத்துவரியினை சீராய்வு செய்யும் பட்சத்திலேயே மேற்கண்ட நிதி ஆதாரங்களை ஈடுசெய்திட இயலும்.

மேலும், இந்நகராட்சியில் 1998 ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின் போது அன்றைய தேதியில் நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டும், நகராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டும் கீழ்க்கண்ட அட்டவணையின்படி சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**1998 ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வு அட்டவணை**

| | |
|---|---|
| "A" மண்டலம் | ரூ. 2.75 |
| "B" மண்டலம் | ரூ.2.25 |
| "C" மண்டலம் | ரூ.1.75 |

மேலும், இந்நகராட்சியில் 2008 ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின் போது பல்வேறு ஆட்சேபனைகள் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்றதின்படியும், அரசானை எண்.150 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கு துறை நாள்.12.11.2007–ன்படி மேற்கண்ட சொத்துவரி சீராய்வினை அந்தந்த நகராட்சிகளே செய்திடலாம் என்பதற்கினங்கவும், இந்நகர்மன்ற தீர்மான எண் 378 நாள்.31.07.2008–ன்படியும் கீழ்க்கண்ட அட்டவணையின்படி 01.04.2008 ன்படி சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டது.

**<u>2008 ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வு அட்டவணை</u>**

| | |
|---|---|
| "A" மண்டலம் | ரூ. 2.80 |
| "B" மண்டலம் | ரூ.2.30 |
| "C" மண்டலம் | ரூ.1.80 |
| "D" மண்டலம் | ரூ.1.10 |

மேலும், பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், வணிகர்கள் ஆகியோர்களுக்கு சொத்துவரி சீராய்வின் மூலம் ஏற்றப்படும் நிதிச்சுமையினை கருத்தில் கொண்டும், இந்நகராட்சிக்கு சொத்துவரி சீராய்வின் மூலம் நிதியிழப்பு ஏதும் ஏற்படாத வகையிலும் அரசாணை எண்:73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்:13.07.2018 மற்ஞறும் அரசாணை எண்:76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.27.07.2018 ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறும், மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றிக்கையின்படியும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும், குடியிருப்பு அல்லாத பிறகட்டிடங்களுக்கு 100% மிகாமலும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் பின்வரும் நிதி ஆண்டுகளில் வரப்பெறும் நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு இந்நகராட்சியின் **சொத்துவரி அடிப்படை மதிப்பினை கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு உயர்த்திடவும், ஏற்கனவே உள்ள சொத்துவரி விதிப்புகளுக்கு குடியிருப்பு கட்டிடங்களுக்கு 18%ம் குடியிருப்பு அல்லாத பிற கட்டிடங்களுக்கு 18%ம் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளவும், வணிகர்கள் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க, தெருக்களை மறுசீராய்வு** செய்திடவும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி தெருக்களை மறுசீராய்வு செய்திடவும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும்.

**<u>2018 ஆம் ஆண்டு சீராய்வு செய்யப்படும் அடிப்படை மண்டல மதிப்பு விபரம்</u>**

| | |
|---|---|
| "A" மண்டலம் | ரூ. 3.30 |
| "B" மண்டலம் | ரூ.2.70 |
| "C" மண்டலம் | ரூ.2.10 |

<u>**2018 ஆம் ஆண்டு மறுசீராய்வு செய்யப்படும் தெருக்களின் விபரம்**</u>

| **பொள்ளாச்சி நகராட்சி<br>தெருக்கள் மண்டலம் சீராய்வு செய்தல் விபரம்** | | | | |
|---|---|---|---|---|
| **வ.எண்** | **வார்டு எண்** | **தெரு பெயர்** | **ஏற்கனவே உள்ள மண்டலம்** | **தற்போது மாற்றம் செய்யப்படும் மண்டலம்** |
| 1 | 4 | ரிசர்வாயர் வீதி | C | B |
| 2 | 13 | புதிய திட்ட சாலை | C | A |
| 3 | 16 | கோட்டூர் ரோடு | B | A |
| 4 | 16 | எஸ்.எஸ்.கோவில் வீதி | C | B |
| 5 | 17 | கிருஷ்ணசாமி வீதி | C | B |
| 6 | 17 | பெருமாள் வீதி | C | B |
| 7 | 17 | ராஜாமில் ரோடு | C | B |
| 8 | 19 | மார்க்கெட் ரோடு | C | B |
| 9 | 28 | மகாத்மா காந்தி மண்டபம் வீதி | C | B |
| 10 | 28 | கடை வீதி | C | B |
| 11 | 28 | வெங்கட்ரமணன் வீதி | C | B |
| 12 | 28 | கோட்டூர் ரோடு | B | A |
| 13 | 1 முதல் 36 வரை | 2008ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின்படி D மண்டலமாக இருந்துவரும் அனைத்து தெருக்களும் | D | C |

**அலுவலக குறிப்பு:**

1. நகராட்சியால் 01.04.2008ல் சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துவரி சீராய்வு செய்யபட வேண்டும் அதன்படி 01.04.2013ல் மேற்க்கொள்ளப்பட வேண்டிய சொத்துவரி சீராய்வு தற்போது 01.04.2018 முதல் அமல்படுத்த அரசாணை எண் வெளியிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
2. இந்நகராட்சியின் 2017–2018 ஆண்டின் (துணிக்கை செய்யப்படாத) மொத்த வரவு மாநில நிதிக்குழு வரவு உட்பட 3645.38 இலட்சம், செலவு 3826.62 நிலுவையாக உள்ள நகராட்சிக்கு வரப்பெற வேண்டிய வரியினங்களையும் வரவாக காட்டப்பட்டுள்ளது.
3. 01.10.2008ல் நடைமுறைக்கு வந்த சொத்துவரி சீராய்விற்கு பின்னர் ஏழாவது ஊதியக்குழுவின் அடிப்படையில் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர படிகள் மிக அதிக அளவில் அதிகரித்துள்ளது.

4. பொள்ளாச்சி நகரம் வளர்ந்து வரும் நகரம் என்பதாலும் மேலும் 50 ஆண்டுகளுக்கு முன்னர் பதிக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் அவற்றினை அகற்றிவிட்டு புதிய குழாய்கள் அமைக்கவும் குடிநீர் திட்ட பணிக்கு கடன் பெற வேண்டி உள்ளது. இதன் மூலம் பெறப்படும் வருவாயை விட கூடுதலாக அசலும் வட்டியும் நகராட்சியால் செலுத்தப்பட வேண்டும்.
5. நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ரூ.109.62 கோடியில் செயல்படுத்தபட்டு வருகிறது. இதில் நகராட்சி பங்குத் தொகை ரூ.10.54 கோடி மற்றும் கடன் ரூ.10.54 கோடி மற்றும் அதற்குறிய வட்டித் தொகையும், மேலும் வருடாவருடம் நகராட்சி பராமனிப்பு செலவு ஊதிய தொகை ரூ2.70 கோடியும் நகராட்சியால் செலுத்தப்பட வேண்டும்.
6. நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்ட பணிகள் முடிவுற்ற பகுதிகளுக்கு சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி பங்குத் தொகை செலுத்த வேண்டி உள்ளது.
7. பொள்ளாச்சி நகராட்சியினை குப்பையில்லா நகரமாக மாற்றும் பொருட்டு திடக் கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தப்பட நகராட்சி பங்குத் தொகை செலுத்த வேண்டி உள்ளது.
8. புதிய அலுவலக கட்டிடத்திற்கு கட்ட பெற்ற கடனுக்கு அசல் மற்றும் வட்டித் தொகை செலுத்த வேண்டி உள்ளது.
9. நகராட்சிக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நகராட்சியின் வளர்ச்சி பணிக்கும், ஏனைய செலவினத்திற்கும் வரி உயர்வு செய்ய வேண்டிய நிலை உள்ளது.

எனவே எதிர்வரும் காலத்தின் செலவினைத்தை கருத்தில் கொண்டும், மக்களின் அடிப்படை தேவையினை செய்யவும், இந்நகராட்சியின் வளர்ச்சி பணியினை கருத்தில் கொண்டும் மற்றும் பொதுமக்கள், வர்த்தகர்கள், நுகர்வோர் ஆகியோர்களின் நலனை கருதிச் சீராய்வு நடைபெற்று 10 ஆண்டுகள் ஆகியுள்ளதாலும் அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின் அடிப்படையில் நிதி இழப்பு ஏதும் ஏற்படாத வண்ணம் சொத்துவரியினை சீராய்வு செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண். 3900 /2018 /அ2**